201737

No. of Printed Pages : 6

**6110**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## Part III – Vocational Subjects

(Agricultural Area)

# வேளாண் செயல்முறைகள்
# AGRICULTURAL PRACTICES

( தமிழ் வழி / Tamil Version )

நேரம் : 3 மணி ]                                        [ மொத்த மதிப்பெண்கள் : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக.

**I. (A) சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **15x1=15**

**1.** ஒரு எக்டர் நெல் பயிரிட தேவையான நாற்றங்கால் அளவு _________.

(அ) 10 சென்ட்    (ஆ) 40 சென்ட்

(இ) 60 சென்ட்    (ஈ) 20 சென்ட்

**2.** மக்காச்சோளம் இறவை சாகுபடிக்கேற்ற ஓர் வீரிய ஒட்டு இரகம் _________.

(அ) கோ. 1    (ஆ) 30 V92

(இ) $COH(M)_4$    (ஈ) COBC 1

[ திருப்புக / Turn over

3. மானாவாரி சாகுபடியில் நிலக்கடலையுடன் _________ விகிதத்தில் துவரை பயிரிடப்படுகிறது.

(அ) 6 : 1 (ஆ) 4 : 1 (இ) 2 : 1 (ஈ) 3 : 1

4. நிலக்கடலை விதை நேர்த்திக்கான உயிர் உரம்.

(அ) ரைசோபியம் (ஆ) அசோஸ்பைரில்லம்
(இ) மைக்கோரைசா (ஈ) குளோர்பைரிபாஸ்

5. பருத்தி விதைகளை புங்க இலைச்சாற்றில் ஊற வைப்பதன் மூலம் விதைகளை _________.

(அ) பஞ்சு நீக்கலாம்
(ஆ) பூசணங்களை அழிக்கலாம்
(இ) பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்
(ஈ) கடினப்படுத்தலாம்

6. தக்காளிப் பயிரின் தாயகம் _________

(அ) சீனா (ஆ) பெரு
(இ) சிலி (ஈ) இந்தியா

7. பாக்கு எந்த குடும்பத்தைச் சார்ந்தது ?

(அ) மால்வேசியே (ஆ) சொலனேசியே
(இ) மியூசேசியே (ஈ) பால்மே

8. புகையிலையின் _________ கால்நடைத் தீவனமாகப் பயன்படுகிறது.

(அ) இலை (ஆ) தண்டு
(இ) பூக்கள் (ஈ) பிண்ணாக்கு

9. கவாத்து செய்யப்பட்ட பகுதிகளில் _________ பூசணக் கொல்லி பசை தடவுதல் வேண்டும்.

(அ) போர்டோ பசை (ஆ) திரம்
(இ) கேப்டான் (ஈ) கந்தகம்

10. ஒருங்கிணைந்த பண்ணையத்தில் சிக்கனமான உப தொழில் _________

(அ) ஆடு வளர்ப்பு (ஆ) மீன் வளர்ப்பு
(இ) கோழி வளர்ப்பு (ஈ) மாடு வளர்ப்பு

11. சூரியகாந்தி பயிருக்கான பயிர் விலகு தூரம் ________
(அ) 10 மீ
(ஆ) 50 மீ
(இ) 100 மீ
(ஈ) 200 மீ

12. சொட்டு நீர் பாசனத்தின் மூலம் சேமிக்கப்படும் நீரின் அளவு ________
(அ) 20-30 சதம்
(ஆ) 30-40 சதம்
(இ) 40-60 சதம்
(ஈ) 10-20 சதம்

13. தேனீ குடும்பத்தில் 90 சதவீதத்திற்கும் மேல் ________ தேனீக்கள் இருக்கும்.
(அ) ராணி
(ஆ) வேலையாள்
(இ) ஆண்
(ஈ) ராஜா

14. தாவர வளைவுகள் அமைக்கும் இடம் ________
(அ) மையம்
(ஆ) ஓரப்பகுதி
(இ) நுழைவாயில்கள்
(ஈ) வெளியேறும் பகுதி

15. கோழிகளில் ஏற்படும் நோய் ________
(அ) ராணிக்கெட்
(ஆ) அடைப்பான்
(இ) அப்ளோ நச்சு
(ஈ) பால் காய்ச்சல்

(B) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **ஓரிரு** வார்த்தைகளில் விடையளிக்கவும். **15x1=15**

16. நிலக்கடலை வேர்ப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான விதை நேர்த்தி இரசாயனம் யாது ?

17. பருத்தி பூச்சிகொல்லி விதைநேர்த்திக்கு பயன்படும் இரசாயனம் எது ?

18. ஒரு எக்டேர் கரும்பு நடவுக்கு தேவையான விதைக் கரணைகள் அளவு யாது ?

19. கிழங்குப் பயிர் வறட்சியைத் தாங்க ________ கரைசலில் விதைக் கரணைகளை ஊற வைத்து நடவு செய்யலாம் ?

20. பப்பாளியில் உள்ள நொதிப் பொருள் என்ன ?

21. மஞ்சள் கிழங்கு அழுகல் நோயைக் கட்டுப்படுத்தப் பயன்படும் இரசாயனம் எது?

22. கண்வலிக் கிழங்கில் உள்ள வேதிப் பொருட்கள் யாவை ?

23. சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் இரசாயனம் யாது ?

24. ஒருங்கிணைந்த பண்ணையில் __________ வளர்ப்பில் வைக்கோல் மூலப் பொருளாக பயன்படுகிறது.

25. ஊடகக் கலவையில் உள்ள பொருட்கள் யாவை ?

26. விதை உற்பத்திக்கான பயிர்களில் தோற்றத்தால் மாறுபட்ட பயிர்களை அகற்றுவதற்கு __________ என்று பெயர்.

27. களர் உவர் தன்மையைத் தாங்கி வளரும் நெல் ரகம் எது ?

28. பதப்படுத்துதலில் பயன்படுத்தப்படும் உப்பின் செறிவு யாது ?

29. பல பொருட்களை விற்பனை செய்யும் இடம் __________ என்று அழைக்கப்படும்.

30. இரத்தத்தில் சர்க்கரைச் சத்துக் குறைவால் ஏற்படும் நோய் __________.

## பகுதி - II

II. **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **நான்கு** வரிகளில் விடையளிக்கவும்.
**10x4=40**

31. மக்காச்சோளப் பயிரின் முக்கியத்துவம் யாது ?

32. உளுந்து சாகுபடியில் இரு அறுவடை தொழில்நுட்பம் என்றால் என்ன ?

33. பருத்தி விதையில் முலாம் பூசுதல் என்றால் என்ன ? அவற்றின் நன்மைகள் எழுதுக.

34. பழப்பயிர்களில் வளர்ச்சி ஊக்கி தெளிப்பதன் பயன் யாது ?

35. சென்னா பதப்படுத்துதல் பற்றி குறிப்பு தருக.

36. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு என்றால் என்ன ?

37. ஒருங்கிணைந்த வேளாண் காடுகள் வளர்ப்பில் வளர்க்கப்படும் மரங்கள் யாவை ? பயன்களை எழுதுக.

38. தேர்வு செய்தல் என்றால் என்ன ? அவற்றின் வகைகள் யாவை ?

39. சந்தை தொழில்நுட்பம் என்றால் என்ன ?

40. பசுமைக் கூடம் என்றால் என்ன ? பசுமைக் கூடத்தின் வகைகள் யாவை ?

41. BIS என்றால் என்ன ?

42. கோழிகளைத் தாக்கும் நோய்கள் யாவை ?

## பகுதி - III

III. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும். **5x10=50**

43. நெல் சாகுபடியில் நாற்றாங்கால் நிர்வாகம் பற்றி எழுதுக.

44. பயறு வகைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழி முறைகள் யாவை ?

45. கீரை வகைப் பயிர்களின் சாகுபடி குறிப்புகளை எழுதுக.

46. மஞ்சள் சாகுபடி குறிப்புகளை விவரி.

47. சாமந்தி சாகுபடி முறையினை எழுதுக.

48. நன்செய் நிலத்திற்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் பற்றி எழுதுக.

49. கால்நடைகளைத் தாக்கும் ஏதேனும் ஐந்து நோய்களைப் பற்றி விவரி.

[ திருப்புக / Turn over

## பகுதி - IV

**IV.** எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு பக்க** அளவில் விடையளிக்கவும். **4x20=80**

**50.** நிலக்கடலை பயிருக்கான சாகுபடி முறைகளை எழுதுக.

**51.** கரும்பு பயிருக்கான சாகுபடி முறைகளை எழுதுக.

**52.** புகையிலை பதப்படுத்துதல் பற்றி கட்டுரை வரைக.

**53.** பருத்தி பயிருக்கான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பினை விவரித்து எழுதுக.

**54.** பருத்தி வீரிய ஒட்டு விதை உற்பத்தி முறைகள் பற்றி எழுதுக.

**55.** பதப்படுத்துதலின் முறைகளை விளக்குக.

**-o0o-**